**Starting time 01.21 P.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 53/2016**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 19.03.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகேசன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u> இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், தடத்திற்காக போட்டுள்ளேன். தடத்திற்காக மட்டும் போட்டுள்ளேனா இர்லை வேறு எதற்கேனும் போட்டுள்ளேனா என்றால், தடத்தை இருவரும் பயன்படுத்த வேண்டும், அதில் பைப் லைனும் போட்டு பயன்படுத்தி வருகிறோம். என்ன தடம் என்றால், பட்டா நிலத்திலிருந்து 10க்கு 10 அடி என்ற கணக்கில் தடம் உள்ளது. நான் கூறியுள்ளவாறு வழக்கு போடவில்லை என்றாலும், தற்போது பபுதியதாக வழக்கில் சொல்லாதாதை கூறுகிறேன் என்றால், சரியல்ல.

2. அந்த தடம் எங்கு உள்ளது என்றால், புல எண். 49/1. அது யாருக்கு சொந்தமானது என்றால், மாணிக்கம் பிள்ளை. மாணிக்கம் பிள்ளை யார் என்றால், 1-ஆம் பிரதிவாதியின் தகப்பனார். 10க்கு 10 அடி தடத்தை பொறுத்து நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், நாங்கள் அந்த பாதையை பயன்படுத்தி வருகிறோம். பைப் லைன் போடக்கூடாது என்று பிரச்சனை செய்வதால் அதற்காக பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன்.

3. நான்தான் பிரதிவாதிகளை அவர்களுடைய நிலங்களுக்கு செல்ல விடாமல் தடுத்துவிட்டேன் என்றாலும், அவர்கள் வழக்கு போடுவதற்கு முன்பாக நான் முந்தி கொண்டு இந்த வழக்கை போட்டுவிட்டேன் என்றாலும், சரியல்ல. மாணிக்கம் பிள்ளை அவருடைய நிலத்தை நான் தடமாக பயன்படுத்த அனுமதித்தார் என்றாலும், ஆனால் நான் பிரதிவாதிகள் அவர்களுடைய நிலத்திற்கு செல்வதை மறித்துவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால், சரியல்ல, நான் தடத்தை மறிக்கவில்லை.

4. நான்தான் எனது நிலத்திற்கு அருகில் உள்ள கோவில் நிலத்தையும், ரயில்வே நிலத்தையும் ஆகிகிரமிப்பு செய்து கொண்டு அதன் வழியாக உள்ள தடத்தை பயன்படுத்தி பிரதிவாதிகள் நிலத்திற்கு செல்வதை தடை செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நானும் 1-ஆம் பிரதிவாதியும் 2016-ஆம் ஆண்டில் செய்து கொண்ட தட பாத்திய ஒப்பந்தத்தை மீறி பிரதிவாதிகள் தடத்தை பயன்படுத்துவதை நான் தடுத்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால், நான் தடுக்கவில்லை.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 01.30 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.